பக்கங்கள் 19 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## சொந்த ஊரில் பணியாற்றும் பொலிஸாருக்கு இடமாற்றம்

### பொலிஸ்மா அதிபர் அதிரடி நடவடிக்கை



சொந்த ஊரில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 13 செவ்வாய்க்கிழமை 26.03.2024 அதிர்வு 239




### கீரிமலை ஜனாதிபதி மாளிகை பகுதியில் பரபரப்பு

# மக்களின் கடுமையான எதிர்ப்பால் கைவிடப்பட்டது அளவீட்டுப் பணி!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள காணிகளை நகர அபிவிருத்தி நடவடிக்கைக் காகச் சுவீகரிப்பதற்கான அள வீட்டுப் பணி இன்று முன்னெடுக்கப் படவிருந்த நிலையில் மக்களின் கடும் எதிர்ப்பால் கைவிடப் பட்டது. 02▶



# தென்மராட்சியில் அதிசொகுசு பஸ் மோதி மோ. சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் பலி

### பொலிஸில் சரணடைந்த சாரதி, நடத்துநர் கைது





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், தென்மராட்சி, கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை பகுதியில் அதிசொகுசு பஸ் மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 10:30 மணியளவில் ஏ – 9 வீதியில் மீசாலை வீரசிங்கம் கல்லூரி முன்பாக இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து 04▶

# மக்களின் கடுமையான எதிர்ப்பால் கைவிடப்பட்டது அளவீட்டுப் பணி!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணி அளவீட்டுக்கு நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் இன்று காலை 10 மணியளவில் வருகை தந்திருந்தனர். இதன்போது காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தையும் இடைமறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணி உரிமையாளர்களின் எதிர்ப்பையடுத்துக் காணியை அளவீடு செய்வதற்குத் தமக்கு விருப்பம் இல்லை எனக் காணி உரிமையாளர்கள் கடிதம் எழுதி கையொப்பமிட்டு வழங்கியதையடுத்து நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

அந்தப் பகுதியில் அதிகமான பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே/226) மற்றும் காங்கேசன்துறை (ஜே/233) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன்புதுக்காடு, பத்திராயான், புதுக்காடு, சோலை சேனாதிராயன் ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 29 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் நோக்குடன் இந்த அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப் படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.




















# எகிப்துத் தூதரக நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர்!

Women Plus Bazaar 2024 கண்காட்சியின் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் கலந்து கொண்டார்.

இலங்கைக்கான எகிப்து தூதரகத்தால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட Women Plus Bazaar 2024 கண் காட்சியின் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து கொண்டார்.

கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள One Galle Face சிறப்பு அங்காடி தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கண்காட்சிக் கூடத்தை, ஏனைய அதிதிகளுடன் இணைந்து வடக்கு மாகாண ஆளுநர் திறந்து வைத்தார். பின்னர் கண்காட்சி கூடத்தையும் பார்வையிட்டார்.



நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் வசிக்கும் 100 இற்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்களின் உற்பத்தி களை மேம்படுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

பல்வேறு மாவட்டங்களிலும் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் பெண் தொழில் முனைவோரை இலக்காகக் கொண்டு இந்த கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.



# தவறான அக்குபஞ்சர் சிகிச்சையால் யாழ்ப்பாணத்தில் ஒருவர் உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன்)

முகநூலில் பதிவிடப்பட்ட அக்கு பஞ்சர் சிகிச்சை தொடர்பான பதிவை நம்பிச் சென்ற நபர் ஒருவர் கிருமித் தொற்றுக்கு உள்ளாகி யாழ்ப்பாணத்தில் உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி, வளலாய் கிழக்கைச் சேர்ந்த மாணிக்கம் சற்குணராஜா என்ற 64 வயதானவரே நேற்று உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த நபர் முகநூல் விளம்பரத்தை நம்பி யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் அக்குபஞ்சர் வைத்தியர் எனக் கூறப்படுவரால் நடத்தப்படும் சிகிச்சை நிலையத்தில் தனது இரண்டு முழங்காலிலும் ஊசியால் குத்தும் வகையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இரு கால்களிலும் வீக்கம், நோ ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் முழங்காலில் ஏற்றப்பட்ட ஊசியால் கிருமித்தொற்று ஏற்பட்டு உடல் முழுவதும் பரவல் அடைந்து உயிரிழப்பு சம்பவித்தது என அறிக்கையிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அக்குபஞ்சர் சிகிச்சை முறைக்கு எவ்வித பதிவும் இல்லை என்பதுடன் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்தவர்கள் முகநூலிலோ வேறு எந்த முறையிலுமோ விளம்பரம் செய்ய முடியாது என்பது அடிப்படை விதியாகும்.

யாழ்ப்பாணத்தில் போலி மருத்துவர்கள் விளம்பரம் செய்வதன் மூலம் தவறான மருத்துவ சிகிச்சைகளில் ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதாரத்துறையோ, பொலிஸாரோ நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் பல தரப்பினராலும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மொட்டுவுடன் முரண்படும் அமைச்சர்களுக்கு ஆப்பு?

## வேட்புமனு வழங்கக்கூடாது என யோசனை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தீர்மானத்துக்கு முரணாகச் செயற்படும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கு அடுத்த தேர்தலின் போது போட்டியிடுவதற்கு வேட்புமனு வழங்கக்கூடாது எனக் கட்சி தலைமைப்பீடத்திடம் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் யோசனை முன்வைத்துள்ளனர்.

12 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் இந்த யோசனை கையளிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து அமைச்சரவையில் இடம்பெற்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சார்பாகக் கருத்துகளை வெளியிட்டுவரும் அரசியல்வாதிகளை இலக்குவைத்தே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்ற ஹயஸ்

## படுகாயமடைந்த பெண் பருத்தித்துறை வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணொருவரை ஹயஸ் ரக வாகனம் ஒன்று மோதி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

விபத்தில் துன்னாலை மேற்கைச் சேர்ந்த குமரேசமூர்த்தி வனிதா (வயது 51) எனும் பெண்ணே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மந்திகை பகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளைக்கு அருகில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பிரதான வீதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் உள்ள கண்காணிப்புக் கமராக்களின் உதவியுடன் விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்ற ஹயஸ் வாகனத்தை அடையாளம் கண்டுள்ளதாகவும், அதன் சாரதியைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தென்மராட்சியில்....

கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த அதிசொகுசு பஸ் பாதசாரிக் கடவையில் பிறிதொரு வாகனத்தை வேகமாக முந்திச் செல்ல முற்பட்ட வேளை கிளிநொச்சியில் இருந்து கைதடி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தரை மோதியதில் மேற்படி குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் விவேகானந்த நகர் கிழக்கு, கிளிநொச்சியைச் சேர்ந்த 41 வயதுடைய சின்ராசா சுதன்ராஜா என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய சாரதி மற்றும் நடத்துநர் பஸ்ஸில் இருந்து தப்பித்துக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

இருவரையும் கைது செய்த பொலிஸார், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சொந்த ஊரில்....

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“எதிர்வரும் காலங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது சொந்த ஊரில் கடமையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரிகள் முதல் கான்ஸ்டபிள்கள் வரையிலான பதவி நிலைகளை வகிப்பவர்கள் இவ்வாறு சொந்த ஊரில் பணியாற்ற இடமளிக்கப்படாது.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது மனைவியரின் சொந்த ஊரிலும் கடமையில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாது.

இதற்கமைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், துறைசார் பொறுப்பதிகாரிகள் முதல் கான்ஸ்டபிள்கள் வரையிலான பதவி நிலைகளை வகிப்பவர்கள் தங்களது ஊரில், மிக அருகாமையில் அல்லது மனைவியின் ஊரில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளார்களா? என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளேன்.

இதற்காக விசேட குழுவொன்றையும் நியமித்துள்ளேன்.” – என்றார்.




# லைக்கா ஞானம் அறக்கட்டளை நிறுவனத்தால் ரயில் நிலையங்களுக்கு நீர் சுத்திகரிப்பு தொகுதி!

அனைத்துலக நீர் தினத்தை முன்னிட்டு லைக்கா ஞானம் அறக்கட்டளையினர் இலங்கை முழுவதும் அமைந்துள்ள ரயில் நிலையங்களில் குடிநீர் சுத்திகரிப்பு தொகுதிகளை உருவாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

மார்ச் 22 ஆம் திகதி அன்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இந்த விடய அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டது.

முதல் தொகுதியாக 50 ரயில் நிலையங்களுக்குக் குடி தண்ணீர் வழங்கல் செயற்பாடுகள் ஆரம்பிக்கபடவுள்ளன. ஏனைய ரயில் நிலையங்களுக்கும் இது விஸ்தரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிறுவுநர் அல்லிராஜா சுபாஸ்கரனின் வழிப்படுத்தலில் குடி தண்ணீர் வழங்கல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

மேலும் லைக்கா ஞானம் அறக்கட்டளை ஊடாக மாத்தறை பனவில கிராமத்துல் நூறுக்கு மேற்பட்ட மக்களுக்கான குடி தண்ணீர் பெற்றுக் கொள்ளுவதற்கான குடி தண்ணீர் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அனைத்துலக நீர் தினத்தை முன்னிட்டு லைக்கா ஞானம் அறக்கட்டளையின் 25 மாவட்ட சமுதாயக் கூடத்தில் பாடசாலை மாணவர்களுக்கான சித்திர திருவிழாவும் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# மண்முனை வடக்குப் பிரதேச முயற்சியாண்மை கண்காட்சி!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு “மட்டு முயற்சியாண்மை 2024” எனும் தொனிப்பொருளில் நேற்று திங்கட் கிழமை (25) உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான பிரதேச மட்ட விற்பனைக் கண்காட்சி பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த விற்பனைக் கண்காட்சியை மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் பிரதேச வளாகத்தில் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்களான வேணி, மற்றும் யசோ ஆகியோரின் ஒழுங்கு படுத்தலின் கீழ் கண்காட்சியும் விற்பனையும் முன்னெடுக்கப்பட்டன.



இதன்போது சிறு தொழில் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதனைப் பார்வையிடுவதற்குப் பெரும் எண்ணிக்கையானோர் வருகை தந்திருந்தனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இதுதான் கள நிலமை

திட்டமிட்டபடி முதலில் ஜனாதிபதி தேர்தல்தான். அதற்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்தும் முயற்சி சரிவரவில்லை என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை வைக்கச் செய்யும் முயற்சி வெற்றி பெறவில்லை. இது தொடர்பில் மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ முன்னெடுத்த நகர்வு பலிக்கவில்லை. தமது வலியுறுத்தலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவரால் இணங்க வைக்க முடியவில்லை என்று அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

உத்தேச ஏற்பாடுகளின்படி ஜூலை இரண்டாம் வாரத்தில் ஜனாதிபதி தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பையும் தேர்தல் ஆணையம் விடுக்கும். பெரும்பாலும் ஒக்டோபர் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும். அதாவது சரியாக இன்னும் ஆறு மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல்.

பெரும்பாலும் மே மாதம் - வெசாக் முடிந்த கையோடு - ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் சூடு பறந்து, விடயம் தூள் கிளப்புமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய நிலையில் மூன்று பிரதான வேட்பாளர்கள் களத்தில் நிற்பர் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ஆளும் தரப்புப் பக்கத்தில் பொது வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். இப்போதைய ஆளுங் கட்சியான மொட்டுக்கட்சி தரப்பில் தகுதியான ஜனாதிபதி வேட்பாளர் யாரும் இல்லை. அந்தச் சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதைத் தவிர, மொட்டுக் கட்சிக்கு வேறு வழி இல்லை.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ களமிறங்குவதும் பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

அதேபோல ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்கா தேசிய மக்கள் சக்தி சார்பில் களமிறங்குகின்றார். அவரின் வேட்பாளர் நியமனம் எப்போதோ உறுதி செய்யப்பட்டு பிரசாரமும் களேபரமாக ஆரம்பித்துவிட்டது. இந்தத் தேர்தலில் தமக்கே வெற்றி என்ற உறுதியுடன் அவரின் கட்சி பிரசாரத்தை முழுமூச்சில் முன்னெடுக்கின்றமை கண்கூடு.

ஆக, முன்னர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்ட மூவர் இந்தத் தடவை வெற்றிக்குக் கங்கணம் கட்டித் தங்களுக்குள் மோதி நிற்கப் போகின்றனர் என்பது நிலைமை.

மூவருக்கும் ஏறத்தாழ சரிசமமாக தென்னிலங்கை வாக்குகள் பிரியும் போது, வெற்றியைத் தீர்மானிக்கும் தரப்பாக சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும் மாறும் சூழ்நிலை ஏற்படும் சாத்தியமும் உண்டு.

இந்தப் பின்புலத்தில் தமிழர்களின் வாக்குகள் எந்தத் தரப்புக்கு வழங்கப்படுவது பொருத்தமானது என்பதை தமிழர் தரப்புகள் ஒன்று கூடி சிந்தித்து, சமயோசிதமாகவும், புத்திசாதுரியத்துடனும் தீர்மானித்து, அதன் படி தமிழ் வாக்காளர்களை வழிப்படுத்த வேண்டும்.

இந்த விடயங்களை தீர்மானிப்பதற்கு முதலில் தமிழர் தரப்பு வாக்குகளின் எண்ணிக்கை, அதை வெளிப்படுத்தச் செய்வதில் தமக்குள்ள அதிகாரம் மற்றும் செல்வாக்கு, இயலுமை, தெற்கில் பிற தரப்புகளின் ஆதரவு நிலைமை போன்றவற்றையெல்லாம் கூட துல்லியமாகக் கணக்கிட வேண்டும். மதிப்பிட வேண்டும்.

தமிழர் தரப்பு தன் சக்தியை வெளிப்படுத்தித் தன் அபிலாசைகளை முன்நிறுத்துவதன் மூலம் ஏதேனும் சாதிக்க முடியும் என்று கருதினால் - அதை ஒன்றுபட்டுச் செய்ய வைக்கும் ஆளுமையும் செல்வாக்கும் இயலுமையும் தங்களுக்கு உள்ளது என்று தமிழ்த் தலைவர்கள் கருதுவார்களேயானால் - அது குறித்து விரிவாக, ஆழமாக ஆராய்ந்து, தீர்க்கமாக முடிவெடுத்து, அந்தத் தீர்மானத்தின்படி முழுமூச்சுடன் செயல்பட வேண்டும். அதை விடுத்து, மனித சங்கிலி போராட்டத்திற்கு 'எடுத்தேன்,கவிழ்த்தேன்' என்ற மாதிரி அழைப்பை விடுத்து விட்டு, போராட்ட தினத்தில் வீதியிலே ஆள்கள் திரளாத கேலித்தனமான நிலைமையை இவ்விடயத்திலும் ஏற்படுத்தி விடக் கூடாது.

தென்னிலங்கையில் ஒரு தலைவரைத் தெரிவதற்கு அங்கு தேர்தல் சண்டை. தமிழர் தாயகத்தில் அந்தத் தேர்தலை எப்படி அணுகுவது என்ற குழப்பம். இதுதான் இன்றைய தேர்தல் கள நிலைமை.




# கிழக்குப் பல்கலை நடத்தும் சர்வதேச ஆய்வு மாநாடு!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழக மானது வவுனியா பல்கலைக்கழகம், ஆசிய மற்றும் தென்னாசியப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றோடு இணைந்து "தமிழர்களின் கலை மற்றும் கலாசாரம்" என்ற தலைப்பில் சர்வதேச ஆய்வு மாநாடு ஒன்றை எதிர்வரும் ஜூன் மாதம் 13,14,15 ஆம் திகதிகளில் கிழக்குப்பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் மிக விமர்சையாக நடத்த வுள்ளது.

இந்த ஆய்வு மாநாட்டைக் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஒத்துழைப்போடு தமிழ் கற்கைகள் துறை ஏற்பாடு செய்யவுள்ளது.

இந்த மாநாட்டின் இணைத் தலைமைகளாக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம், வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன் செயற் படவுள்ளனர்.

மாநாட்டின் சர்வதேச ஒருங்கிணைப்பாளராகப் பாண்டிச்சேரி பல் கலைக்கழக பேராசிரியர் ப.இராம லிங்கமும் இணைப்பாளராகக் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சந் திரசேகரம், செயலாளராகத் தமிழ் கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரை யாளர் திருமதி விஜிதா திவாகரன் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

மாநாட்டுக் குழுவில் கிழக்குப் பல் கலைக்கழக கலை கலாசார பீட பீடாதி பதி கலாநிதி வ.குணபாலசிங்கம், வவு னியா பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவு ரையாளர் எஸ்.எஸ். சுதாகரன், பாண் டிச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் எம்.கருணாநிதி, மொறிசியஸ் பல் கலைக்கழக பேராசிரியர் ராஜன் நரசிங்கன் அம்பிராஜன், நியூனியன் பல்கலைக்கழக பேராசிரியர் யோகாச் சாரி நீலமேகம், சென்னை வேல்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் மகாலிங்கம் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

ஆதார சுருதி உரைகளை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தமிழக பேராசிரியர்கள் சிலரும் ஆற்றவுள்ளனர்.

இந்த மாநாட்டில் ஆசிய, தென்னா சிய நாடுகளைச் சேர்ந்த பல பல்கலைக் கழகங்களையும் உயர் கல்லூரிக ளையும் சேர்ந்த அதிகமான புலமை யாளர்கள் நேரடியாகப் பங்குபற்றவுள் ளனர்.

மூன்று நாள்கள் நடைபெறவுள்ள மாநாட்டில் முதல் நாள் ஆரம்ப நிகழ்வு களோடு தமிழர்களின் பாரம்பரிய கலை பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்தும் பல கலை நிகழ்வுகள் நிகழ்த்தப்பட வுள்ளன. இரண்டாம் நாள் ஆய்வரங் குகள் நிகழ்த்தப்படும்.

ஆய்வரங்கின் உப கருப்பொருள்க ளாக வரலாறு மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியங்கள், மொழியும் இலக் கியமும், பாரம்பரிய தொடர்பாடல் முறை கள், பாரம்பரிய கல்வி முறைமைகள், பாரம்பரிய தொழில் முறைமைகளும் சமுதாயமும், கலைகளும் கைவினைப் பொருள்களும், பாரம்பரிய உடைகள், விளையாட்டுக்கள், உணவுகளும் சமையல் மரபுகளும், விழாக்களும் சடங்குகளும், தமிழர்களின் கலை கலாசார மரபுகளில் உலகமயமாக்கத் தின் தாக்கம் ஆகியன அமையும்.

ஆய்வு மாநாட்டைச் சிறப்புற நடத்து வதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வா ளர்களதும் ஆர்வலர்களதும் ஒத்து ழைப்பு பெரிதும் எதிர்பார்க்கப்படுகின் றது.

முக்கியமாகப் புதிய சிந்தனைகளோ டும் முறையியல்களோடும் கூடிய நுணுக்கமான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப் படுகின்றன.

கட்டுரைகள் தமிழிலோ ஆங்கிலத் திலோ எழுதப்படலாம். கட்டுரைகள் அமையவேண்டிய முறைமைகள் மற்றும் ஏனைய மேலதிக விவரங்க ளைக் கிழக்குப் பல்கலைக்கழக இணை யத்தளத்தில் பார்வையிட முடியும்.

# கல்முனை கல்வி வலயம் முன்மாதிரி: காசாவுக்கு மூன்று லட்சம் ரூபா உதவி!

(பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலயக் கல்வி அலு வலகத்தால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டி ருக்கும் காசா மக்களுக்கு மனிதாபிமான நடவடிக்கைக்காக 3 லட்சம் ரூபா கையளிக்கப்பட்டுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீமிடம் கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் முதற்கட்ட காசோ லையை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிரும் பங்கேற்றிருந்தார்.

வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப்பணிப்பாளர் தலைமை யில் நேற்று (25) நடைபெற்ற இப்தார் நிகழ்வின் போதே இந்த நிகழ்வு இடம் பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளரது வழிகாட்டலுக்கு அமைய கணக்காளரின் நெறிப்படுத்தலில் வலயக் கல்வி அலுவலக கல்விசார், கல்விசார ஊழியர் கள் மற்றும் அதிபர்களின் நிதிப்பங் களிப்புடன் இந்தத் தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.வருடந்தோறும் இடம்பெறும் இப்தார் நிகழ்வுக்கான செலவீனத்தை மட்டுப்படுத்தியே இந்தத் தொகையானது திரட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தேசிய நீர் தினத்தை முன்னிட்டு குடி தண்ணீர் விநியோகத் திட்டம்

**(மன்னார்)**

காலநிலை மாற்றத்தைத் தாக்குப் பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ கருத் திட்டத்துக்கு அமைய தேசிய நீர் தினத்தை முன்னிட்டு 'பசுமையான தேசம் சுபீட்சமான நாளை' எனும் தொனிப் பொருளில் மன்னார் மடு வலயத்தில் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இன்று திங்கட்கிழமை நேற்று (25) மதியம் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் விநியோகத் திட்டம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், கௌரவ விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

இதன் போது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் சுமார் 3 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் விநியோகத் திட்டம் இவ்வாறு திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்தியத் தூதரால் வழங்கப்பட்ட புத்தகப் பைகள் மடு வலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும் 477 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.





# கல்முனை வடக்கு செயலகம் என்ற ஒன்றை அரசு வர்த்தமானி மூலம் உருவாக்கவில்லை

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாகப் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு கோரி அனைத்து சிவில் சமூகம் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று மீண்டும் கல்முனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது மீண்டும் தேர்தலை மையப்படுத்தி தமிழ் மக்களை ஏமாற்றும் செயலாகும்.

இவ்வாறு புதிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது பற்றி அக்கட்சியின் தேசிய தலைவர் முஸம்மில் அபூசாலி தெரிவித்ததாவது,

கல்முனையில் வடக்கு பிரதேச செயலகம் ஒன்றை அரசு உருவாக்கவில்லை. மாறாகக் கல்முனைப் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் உப செயலகம் ஒன்றே உருவாக்கப்பட்டது.

இந்த உப செயலகத்தை தமிழ் செயலகம் என தமிழ் இனவாத அரசியல்வாதிகள் அழைத்து தமிழ் மக்களை ஏமாற்றினர். பிரதேச செயலகங்கள் இன ரீதியில் அமைய முடியாது என அரசாங்கம் சொன்னதை தொடர்ந்து கல்முனை வடக்கு செயலகம் என அழைக்கத் தொடங்கினர்.



கல்முனை வடக்கு செயலகம் என்ற ஒன்றையும் அரசு வர்த்தமாணி மூலம் உருவாக்கவில்லை என்று தெரிந்தும் தேர்தல் நன்மைக்காக அப்பாவித் தமிழ் சிவில் மக்களை இனவாத தமிழ் அரசியல்வாதிகள் உசுப்பேற்றி விட்டுள்ளனர்.

ஆகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக இந்த உப செயலகத்தை அரசு ரத்துச் செய்து, தமிழ் மக்கள் 99 வீதம் வாழும் பாண்டிருப்புக்கு, பாண்டிருப்பு பிரதேச செயலகம் ஒன்றை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.





# காரைதீவில் பங்குனி உத்தர தீர்த்தம்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனி உத்தர உற்சவத்தின் முத்துச் சப்பர பவனி மற்றும் தீர்த்தோற்சவம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நேற்று (24) நடைபெற்றது.



# மக்கள் வாழ்வாதாரங்களைச் சுயமாக தேடிக் கொள்ளும் வழிவகைகளை உருவாக்குவதே தலைவர்களின் கடமை

## கிழக்கின் கேடயம் தலைவர் சபீஸ் தெரிவிப்பு



(நூருல் ஹுதா உமர் )

புத்தாக்க சிந்தனைகளோடு சமூகத்தை வழிப்படுத்தி நெறிப்படுத்தி, மக்கள் தமக்கான வாழ்வாதாரங்களை சுயமாக தேடிக் கொள்ளும் வழிவகைகளை உருவாக்கிக் கொடுப்பதே தலைவர்களின் கடமையாக இருக்க வேண்டும். தவிர, அரசு வழங்கும் நிதியை பங்கிடுவது சமூகத் தலைவர்களின் பணியல்ல என்று கிழக்கின் கேடயம் தலைவர் எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

கிழக்கின் கேடயம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடலும் இப்தார் நிகழ்வும் நேற்று அக்கரைப்பற்றிலுள்ள எம்.எஸ். லங்கா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில், கட்சிகளும் அவற்றுக்குக் கிடைக்கும் அதிகாரங்களும் மக்களை நின் மதியாகவும் மேம்பட்டவர்களாகவும் வாழவைப்பதற்காகவே இருக்க வேண்டும். ஆனால், மக்களிடம் இப்போது நிம்மதி இல்லை. அரசு தரும் பணத்தைப் பிரித்துக் கொடுப்பதற்குத் தலைவர்கள் தேவையில்லை. புத்தாக்க சிந்தனைகளோடு சமூகத்தை வழிப்படுத்தி நெறிப்படுத்தி மக்கள் தமக்கான வாழ்வாதாரங்களை சுயமாக தேடிக்கொள்ளும் நிலையை உருவாக்குவதே தலைவர்களின் கடமையாகும்.

இதனை தலைவர்கள் செய்யும் போதுதான் மக்கள் நிம்மதியாக வாழ்வார்கள். ஆனால் அதனை இப்போது யார் செய்கின்றார்கள்? இந்தக் கேள்வி சமூகத்தில் உள்ள ஒவ்வொருத்தருக்கும் தோன்ற வேண்டும்.

காலாவதியான சிந்தனையாளர்களைத் தவிர்த்துவிட்டு, தூரநோக்கு உள்ளவர்களை மக்களுக்கு அறிமுகம் செய்யவேண்டியது ஊடகவியலாளர்களின் கடமையாகும். சமூகத்தை வழி நடத்தக்கூடியவர்களை நாம் எல்லோரும் சேர்ந்து உருவாக்கவேண்டும்.

பிரச்சினைகளைப் பேசுபவர்களாக இல்லாமல் தீர்வுகளைக் கண்டுபிடித்துக் கூறுபவர்களாகவும், பிழைகளை மட்டும் கூறிக் கொண்டிருக்காமல், சரியானவற்றை அடையாளப்படுத்துபவர்களாகவும் நாங்கள் இருப்பது போன்று, இன்னும் பலரை உருவாக்குவதற்கு ஊடகவியலாளர்கள் பங்களிக்க வேண்டும்.- என்றார்.




# காத்தான்குடிக்கு ஐ.தே.க. அமைப்பாளர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் காத்தான் குடி அமைப்பாளராக எஸ். எம். எம். சாபி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் ஐக்கிய தேசியக் கட்சி யின் செயலாளரால் மட்டக்களப்பில் வைத்து வழங்கப் பட்டது.

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம்; தொடர் போராட்டம் இடம்பெறும் என அறிவிப்பு!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேச செயல கத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்கு முறைகளுக்கு எதிராக அங் குள்ள பொது மக்கள் நேற்றுத் திங் கட்கிழமை (25) போராட்டத்தை ஆரம்பித்த நிலையில் போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிர்வாக அடக்கு முறைகளை இனியும் பொறுத்துக் கொண்டு இருக்க முடியாது எனவும் அரசு இனியும் வாக்குறுதிகளை வழங் கிக் காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வைத் தரும்வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் என்று மக்கள் மேலும் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தப் பிரதேச செயலக விடயம் தொடர்பில் இறுதியாக கடந்த 2019 ஆண்டு போராட்டம் நடத்தப்பட்டது. கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ப தற்காக மேற்கொள்ளப்பட்ட அந்த உண்ணாவிரதப் போராட்டம் பல அரசியல்வாதிகள் பிரமுகர்களின் போலி வாக்குறுதிகளால் கைவிடப்பட்டிருந்தது.

இந்த உண்ணாவிரதப் போராட்ட மானது அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமு யர்த்தி தரவேண்டும் என்ற கோரிக் கையை வலியுறுத்தி பிரதேச செய லகத்தின் முன்பாக இடம்பெற்றது.




இதில் கல்முனை சுபத்திராம விகா ரையின் விகாராதிபதி சங்கைக்குரிய ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றிய தலைவர் க.கு.சச்சிதானந்தசிவம், கல்முனை மாநகரசபை உறுப்பினர்க ளான சா.சந்திரசேகரம் ராஜன் மற்றும் அழகக்கோன் விஜயரத்னம் ஐக்கிய வணிகர் சங்கத்தின் தலைவர் கிருஷ் ணப்பிள்ளை லிங்கேஸ்வரன் ஆகி யோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் 2019 ஆம் ஆண்டு ஏமாற்றப்பட்டது போன்று இனியும் நாம் ஏமாறத் தயார் இல்லை என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.



# வெருகலம்பதி சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயத்துக்குச் சென்ற கலாசார அமைச்சர்

திருகோணமலை மாவட்டம் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயத்துக்குத் தொல்பொருள் பௌத்தசாசன மற்றும் கலாசார அமைச்சரான மிதுர விக்ரம நாயக விஜயம் செய்துள்ளார்.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபில நுவான் அத்துகொரல, வெருகல் பிரதேச செயலாளர் எம். ஏ.அனஸ், திருகோணமலை மாவட்ட செயலாளர் சாமிந்த ஹெட்டியாரச்சி, மேலதிக மாவட்ட செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ் , பௌத்த மத குருமார்கள், ஆலய நிர்வாக சபையினர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



இந்த விஜயத்தின் பொழுது கடந்த காலத்தில ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் ஆலயத்தை அண்மித்துள்ள வெருகல் ஆற்று கரைப்பகுதி சேதமடைந்தமை தொடர்பாகவும் பொருத்தமான வகை யில் அணைக்கட்டு அமைத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.





# தோட்டத் தொழிலாளர்களுக்கு 2,000 ரூபா சம்பளமாக உயர்வு வழங்கப்பட வேண்டும்!

## அழுத்தத்தை வழங்க வேண்டும் என்கிறார் நுவரெலியா எம்.பி.

(ஆ.ரமேஸ்)

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை ஈடுசெய்யக் கூடிய வகையில் நியாயமான சம்பள உயர்வாக, நாள் ஒன்றுக்கு 2000 ரூபா சம்பளத்தைப் பெற்று கொடுக்க வேண்டும். இதற்கான அழுத்தத்தை வழங்க வேண்டும் .

இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இராகலை புறநெகும மண்டபத்தில் ஞாயிற்றுகிழமை (24) மாலை வலப்பனை பிரதேச மக்கள் சந்திப்பு இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்க இழுத்தடித்த பெருந்தோட்டக் கம்பனிகள் 1700 ரூபாவை எவ்வாறு வழங்குவார்கள்.

அதேநேரத்தில் இந்த மாத இறுதியில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா நாள் சம்பளம் பெற்று தருவதாகவும் இதை ஜனாதிபதி பெற்று தருவார் என்றும் கூறுகிறார்கள்.

அப்படியானால் ஜனாதிபதி எந்த அடிப்படையில் இந்த 1700 ரூபா சம்பளத்தைத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்க போகிறார்.

இன்று நாடு கடந்த ஐந்து வருடங்களாக பொருளாதார சிக்கலில் தவித்து கொண்டிருக்கும் நிலையில் தோட்ட தொழிலாளர்கள் தமது நாளாந்த வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத சொல்லன்னா துயரங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நிலையில் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தொழில் செய்தாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்று வழங்கும் ஆயிரம் ரூபா சம்பளம் போதாது. இந்த ஆயிரம் ரூபா சம்பளமும் முறையாக கிடைப்பதில்லை.

இந்த நிலையில் 1700 ரூபா சம்பளம் வழங்க உள்ளதாக தெரிவித்துள்ளார்கள். ஆனால் தோட்ட தொழிலை தவிர்ந்த ஏனைய தொழிலில் ஈடுப்படும் தொழிலாளர்களுக்கு 2500 ரூபாவுக்கு அதிகமான சம்பளம் கிடைக்கிறது.

இருப்பினும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபாவழங்குவதாக வாய் பேச்சில் கூறினாலும் இத் தொகையில் இன்று எகிறியுள்ள வாழ்க்கை சுமையை ஈடுகட்ட முடியுமா என்ற கேள்வியுள்ளது.

இந்த நிலையில் தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை ஈடுசெய்யக் கூடிய வகையில் நியாயமான சம்பள உயர்வாக நாள் ஒன்றுக்கு 2000 ரூபா சம்பளத்தைப் பெற்று கொடுக்க வேண்டும். இதற்கான அழுத்தத்தை வழங்க வேண்டும் .

இது இவ்வாறிருக்க கடந்த ஐந்து வருடத்துக்கு முன் இந்த நாட்டையும், மக்களையும் ஆட்சி செய்யும் மகாராஜா என ஒருவர் பெய்யான வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்து சிறிது காலத்தில் அந்த மகாராஜா நாட்டை பொருளாதார சிக்கலில் தள்ளி விட்டு ஓடி ஒழிந்து கொண்டார்.

அதேநேரத்தில் ஐந்து வருடங்கள் உருண்டோடிய போதிலும் நமது நாட்டில் மக்களின் வாழ்க்கை முன்னேற்றமடையவில்லை, நாடு அபிவிருத்தியும் அடையவில்லை.

ஆனால் இப்போது இந்த ஆண்டு தேர்தல் நடக்க கூடிய ஆண்டாகும். இதில் நாடாளுமன்ற தேர்தல், ஜனாதிபதி தேர்தல் கட்டாயம் நடக்கும். எனவே எந்த தேர்தல் இந்த ஆண்டில் நடந்தாலும் ஜனாதிபதி மாற்றமும், ஆட்சி மாற்றமும் நிச்சயமாக இடம் பெறும். அந்த வகையில் நாட்டில் மக்கள் அன்றாடம் தமது வாழ்க்கையில் அனுபவிக்கும் துன்பத்தில் புதிய ஆட்சி மாற்றம் ஒன்றை கொண்டுவர மக்கள் துடி துடிக்கிறார்கள்.

இந்த நிலையில் கடந்த காலத்தில் நல்லாட்சி அரசை ஆட்சிக்கு கொண்டுவர நுவரெலியா மாவட்ட மக்கள் இரண்டு லட்சத்துக்கு அதிகமான வாக்குகளை வழங்கினார்கள் அதேபோல புதிய ஆட்சி மாற்றத்தை கொண்டு வர இம்முறையும் எமது மக்கள் வாக்களிப்பார்கள். இந்த நிலையில் அரவைத் தீர்மா னிக்கும் சக்தி தொழிலாளர் தேசிய சங்கத்தின் கையில்தான் அமையும்.– என்றார்.





# எமது இளைய சமுதாயத்தினர் மத்தியில் விளையாட்டுகளை ஊக்குவிக்க வேண்டும்

## இராஜங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

கடந்த காலத்தைப்போல் அல்லாது இப்பொழுது விளையாட்டில் கவனம் செலுத்துவோர் குறைந்து செல்லுகின்றனர். ஆகவே நாம் எமது இளைய சமுதாயத்தினர் மத்தியில் விளையாட்டுகளை ஊக்குவிக் வேண்டும்.

இவ்வாறு இராஜங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

மன்னார் கரப்பந்தாட்ட பிரீமியர் லீக்கால் கடந்த சில மாதங்களாக நடத்தப்பட்ட கரபந்தாட்டப் போட்டிகளின் வெற்றியீட்டிய அணிகளுக்கும் மற்றும் கடந்த காலத்தில் கரபந்தாட்டப் போட்டிகளில் சிறந்து விளங்கிய வீரர்களுக்கும் பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பு விழா துள்ளுக்குடியிருப்பில் சனிக்கிழமை (23) நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சரும் மன்னார் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத் தலைவருமான கே.காதர் மஸ்தான் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விளையாட்டுத் துறையை நோக்கும் போது இன்றையத் தினம் எமக்கு



மகிழ்ச்சியைத் தருகின்றது.

மன்னார் மாவட்டத்திலிருந்து தேசிய அணிகளுக்கு தெரிவாகி வருகின்ற போதும் அது தற்பொழுது குறைவடைந்து வருவதை உணரக் கூடியதாக இருக்கின்றது.

இவற்றை ஈடு செய்யும் நோக்குடன் இவ்வாறான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவது சாலச் சிறந்ததாக அமைகின்றது.

கடந்த காலத்தைப்போல் அல்லாது இப்பொழுது விளையாட்டில் கவனம் செலுத்துவோர் குறைந்து செல்லுகின்றனர். ஆகவே இதை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமானால் இவ்வாறான போட்டிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியமும் பொறுப்பும் எமக்கு இருக்கின்றது.

இப்பொழுது இளைஞர்கள் தீய வழிகளுக்கு செல்லக் கூடிய நிலைகள் காணப்படுகின்றன.

ஆகவேதான் நாம் இளைஞர்களை ஒன்றுக் கூட்டி இவ்வாறான விளையாட்டுக்களில் ஊக்கப்படுத்தித் தீய வழிகளில் இருந்து அவர்களை விடுவிக்க வேண்டும்.

அத்துடன் விளையாட்டுக்களில் ஊக்கமாக இருந்தவர்கள் சாதனைப் படைத்தவர்களை மறக்காது அவர்களையும் இன்றைய நாளில் நினைவு கூர்ந்து கௌரப்படுத்துவது மிகவும் பெருமையாக இருக்கின்றது.

உடற் பயிற்சிகள் தற்பொழுது குறைந்து செல்வதால் பலருக்கு சிறு வயது தொடக்கம் வியாதிகள் ஏற்பட்டு வருவதையும் நாம் காண்கின்றோம்.

ஆகவே உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு விளையாட்டு அவசியம் என்பதும் யாவருக்கும் தெரிந்த விடயமாகும்.

இங்கு விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு விரைவில் இதற்கான அமைச்சரை அழைத்து வந்து இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கின்றேன்.

இந்த துள்ளுக்குடியிருப்பு கரப்பந்தாட்ட மைதானத்தை மேலும் மெருகூட்டும்படி கேட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.- என்றார்.




# மஸ்கெலியா நகரில் உள்ள மதுபானசாலையில் திருட்டு!

(மஸ்கெலியா)

மஸ்கெலியா நகரில் உள்ள மதுபானசாலையை உடைத்து அங்கு இருந்த ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 600 ரூபா பணம் மற்றும் மதுபானம் என்பன திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. மஸ்கெலியா நகரின் பிரதான வீதியில் அமைந்துள்ள மதுபானசாலை ஒன்றே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளது.

பொலிசார் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்த போது, சந்தேக நபர் மஸ்கெலியா நகர தபால் நிலைய வீதியின் ஊடாக மஸ்கெலியா தோட்ட தேயிலை தொழிற்சாலை வீதி ஊடாக நகருக்கு மேலே சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

மதுபானசாலையின் பூட்டை உடைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட துணியை சந்தேகநபர் மதுபானசாலையின் உள்ளே வைத்துவிட்டு சென்றுள்ளார் என்றும் மேப்ப நாயின் உதவியுடன் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் மஸ்கெலியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




# பாரத விடுதலையில் பெண்கள் உண்ணாவிரதம்: அநீதிக்கு சவால் விடுத்த அன்னை பூபதி!

● **ஐங்கரன் விக்கினேஸ்வரா**

தமிழ்நாட்டில் சுதந்திர போராட்ட முதல் பெண்மணி பத்மாசனியாவார். ஆயினும் அவர் இந்திய தேசத்தின் விடுதலைக்காக மாபெரும் அர்ப்பணிப்பை அளித்த பத்மாசனி வரலாற்றில் மறக்கப்பட்ட பெண் போராளியாகிவிட்டார்.

200 ஆண்டுகளுக்கு மேலாக அந்நியர்களுக்கு அடிமைப்பட்டு கிடந்த இந்திய தேசத்தின் சுதந்திரம் பல்லாயிரக்கணக்கான தியாகிகளின் தியாகத்தால் உருவானது. பத்மாசனி எனும் பெண் இந்த சுதந்திர போராட்டத்தில் தன் குழந்தைகளையே தியாகித்த ஒரு வீரத்தாயின் வரலாறு இன்று பலருக்கும் தெரியாது.

பாரதியாரின் பாடல்களை பட்டிதொட்டி எல்லாம் தமிழ் நாட்டில் பரப்பிய முதல் பெண்ணும் இவர்தான். நாட்டின் விடுதலைக்காக சிறை சென்ற முதல் பெண்.

மதுரைக்குப் பக்கத்தில் இருக்கும் சோழவந்தானில் 1897-இல் பிறந்தவர்.

மதுரையைச் சேர்ந்த சீனிவாசவரதன் என்பவரை திருமணம் செய்து கொண்டவர். சீனிவாச்வரதனும் மகாகவி பாரதியாரும் மிக நெருங்கிய நண்பர்கள்.

ஒருமுறை பாரதியார் ‘உன் சொத்தை விற்றேனும் பத்திரிக்கை நடத்த பணம் அனுப்பு’ என்று கடிதம் எழுதியிருந்தார். மறுநாளே தனது சொத்தை விற்றுப் பாரதியாருக்குப் பணம் அனுப்பி வைத்தவர் வரதன். அத்தனை நெருக்கம்.

பாரதியார் பாடல்களை நாம் எல்லா இடங்களிலும் இன்று கேட்கலாம். ஆனால் அன்றைக்கு அப்படியில்லை. பாடல்கள் வெறும் காகிதத்தில் மட்டுமே இருந்தன. அதை தெரு தெருவாக பாடி, பஜனைகளில் பாடி மக்கள் மத்தியில் எழுச்சி ஊட்டியவர்கள் சீனிவாசவரதனும் பத்மாசனியும்தான்.

1922 இல் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதற்காக வரதன் கைது செய்யப்பட்டார். செய்தி கேட்டு ஓடிவந்த பத்மாசனி தனது கணவருக்கு திலகமிட்டு மாலை அணிவித்து சிறைக்கு அனுப்பி வைத்தார்.

அதுவரை கணவருக்கு உறுதுணையாக இருந்த பத்மாசனி முழுமூச்சாக நாட்டின் விடுதலைக்காகத் தானும் போராட்டத்தில் குதித்தார். தமிழ் நாட்டில் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட முதல் பெண்மணி என்ற பெருமை இவரை வந்து சேர்ந்தது.

கணவர் சிறைக்குச் சென்றபின் தன்னை முற்றிலுமாக மாற்றிக் கொண்டார்.

தினமும் மாலை நேரத்தில் பாரதியார் பாடல்களை பாடியபடியே வீடுவீடாகச் சென்று கதர் விற்று வருவார். சுதந்திரத்துக்கு எதிராக இருப்பவர்களையும், ஆங்கிலேய அரசிடம் வேலைப் பார்ப்பவர்களையும் கூட கதர் வாங்க வைத்துவிடுவார். அவர் பேச்சில் அத்தனை வல்லமை இருந்தது.

பெண்களும் விடுதலைப் போரில் ஈடுபட வேண்டும் என்று இவரின் பேச்சால் பல பெண்களை சுதந்திர போராட்டத்துக்கு இழுத்து வந்தது.

1930 இல் மூன்று மாத கர்ப்பிணியாக இருந்த பத்மாசனி மதுரை ஜான்சி ராணி பூங்கா முன் பேசிய பொதுக் கூட்டத்தில், இவர் பேசியதற்காக ஆங்கிலேய அரசு பத்மாசனியை கைது செய்து ஆறு மாத சிறையில் தள்ளியது.

**பத்மாசனி சிறையில் உண்ணாவிரதம்**

சிறையில் உணவு இன்றி தொடர் உண்ணாவிரதம் இருந்தார். கர்ப்பவதிக்கான ஊட்டச்சத்து உணவு இல்லாததாலும் உடல்நிலை மோசமாக இருந்ததாலும் கர்ப்பம் கலைந்தது.

சிறையில் இருந்து வெளிவந்ததும் மீண்டும் போராட்டத்தில் குதித்தார். அன்றைய காலகட்டத்தில் பொதுக்கூட்டங்களில் பத்மாசனி பேசும் போது அனல் தெறிக்கும். இவரின் பேச்சு என்றாலே அக்கம் பக்க ஊர்களில் இருந்தெல்லாம் மக்கள் ஒன்று கூடிவிடுவார்கள். அவரது குரல் வெண்கலம் போல் கணீரென்று இருக்கும். பேச்சில் உணர்ச்சியும் வேகமும் குவிந்துக் கிடக்கும். மரக்கட்டைக் கூட வீறு கொண்டு எழும். தொண்டர்கள் பாதிக் கூட்டத்தில் ஆவேசமாக எழுந்து, இப்போதே வெள்ளையர்களைக் கூண்டோடு அழித்து விடுகிறோம் என்று புறப்படுவார்கள். அத்தகைய வீரம் அவரது பேச்சில் இருக்கும்.

நாட்டின் விடுதலையை தவிர வேறு எதைப் பற்றியும் சிந்தனை செய்யாத பத்மாசனிக்கு ஏற்கனவே இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்து இறந்திருந்தன. தேச சேவைக்காக தன்னை அர்பணித்துக் கொண்ட அவருக்கு இரண்டு குழந்தைகளுமே ஒரு வயதை அடையும் முன்னே இறந்து போயிருந்தனர்.

**அனல் தெறிக்கும் வீரப் பேச்சு**

காவிரி நடையாத்திரையில் விடுதலையைத் தவிர எனக்கு வேறு எதுவும் பெரிதல்ல என்று கலந்து கொண்டார். வழிநெடுக சுதந்திரப் பிரச்சாரம், பாரதியார் பாடல்கள், சுதந்திரத்துக்காக தங்கள் இன்னுயிரைத் தந்த தியாகிகளின் வரலாறு என்று நடைப் பயணம் முழுவதும் சுதந்திர வேட்கை ஜோதி சுடர்விட்டு எரிந்தது. எட்டு மாதக் கர்ப்பத்துடன் 48 மைல் தூரம் நடந்தே வந்தார். அந்த நேரத்தில் அவருக்குப் பிரசவமானது. அழகான பெண் குழந்தை பிறந்தது. கடுமையான குளிர், பாதையோரம் தங்குவதற்கு நல்ல இடம் வேறு இல்லை. பிறந்த மூன்றாவது நாளில் அந்த குழந்தையும் இறந்தது. அம்மையாரின் உடலும் மோசமாக பாதிக்கப் பட்டது. ஓய்வுக்காக உடல் கெஞ்சத் தொடங்கியது. சில நாள்கள் மட்டும் ஓய்வெடுத்தார்.

உடலில் கொஞ்சம் தெம்பு வந்ததும் மீண்டும் நடக்கத் தொடங்கினார். பத்மாசனியின் பேச்சு மகாத்மா

**(16ஆம் பக்கம் பார்க்க)**







# பாரத விடுதலையில் பெண்கள் உண்ணாவிரதம்: அநீதிக்கு சவால் விடுத்த அன்னை பூபதி!

**(15ஆம் பக்கத் தொடர்ச்சி)**
காந்தியடிகளையும் கவர்ந்திருந்தது. பெல்காமில் காந்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்குச் சிறப்பு பேச்சாளராக பத்மாசனியை காந்தி அழைத்திருந்தார்.

மூன்று குழந்தைகளை இழந்தவர் விடுதலைக்காகவே தனது மூன்று குழந்தைகளையும் பலிகொடுத்த இந்த தாய் இந்தியாவின் விடுதலையை பார்க்காமலே இந்த மண்ணை விட்டு மறைந்தார். தன் உடல் நிலையைப் பற்றிக்க கவலைப்படாமல் நாட்டைப் பற்றியே சிந்தித்த இவர் கடைசியில் 14.1.1936 இந்திய சுதந்திரத்தை காணாமலேயே விண்ணுலகம் சென்றார்.

**மணிப்பூரில் போராடிய ஷர்மிளா இரோம்**

இந்திய சுதந்திரத்தின் பின் ஒரு பெண் 14 வருடங்களாக உண்ணாவிரதம் இருந்தார். அந்த உண்ணாவிரதத்தை முடித்து வைக்க அரசு தலைகீழாக நின்று முயற்சி எடுத்து தடுக்க முற்பட்டது.

1942 ஆம் ஆண்டு மணிப்பூரின் இம்பால் பகுதியில் பிறந்த ஷர்மிளா இரோம் சிறுவயதில் இருந்தே சமூகச் சிந்தனையோடும், சமுதாயம் சார்ந்த கட்டு ரைகளை எழுதுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தவர்.

2000 ஆம் ஆண்டு நவம்பர் 2 அன்று மணிப்பூரின் மலோம் பகுதியில் ஒரு பேருந்து நிறுத்தத்தில் இருந்த பத்து பொது மக்களை ராணுவ வீரர்கள் சுட்டுக் கொன்றதைப் பார்த்த மனித உரிமைப் போராளியான ஷர்மிளா இதனைக் கடுமையாக எதிர்த்தார்.

ஆயுதப்படைக்கு அளித்துள்ள சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்து 14 வருடங்களாக உண்ணாவிரதம் இருந்த ஒரு பெண் போராளியாக உலகின் கவனத்தை ஈர்த்தார்.

அவர் உண்ணா விரதம் இருக்கத் தொடங்கியதை அடுத்து ராணுவம் அவரைக் கைது செய்தது. அப்போதும் அவர் உண்ணா விரதத்தைக் கைவிடவில்லை. ஆனால், அவர் இறந்து விடுவாரோ என்கிற பயத்தில் ராணுவம் அவரை விடுதலை செய்தது.

அதன் பிறகும் அவர் உண்ணாவிரதத்தை கைவிட்டபாடில்லை. உண்ணாவிரதம் தற்கொலைக்கான முயற்சி என ஷர்மிளாவை சாப்பிட வைக்கும்படி உறவினர்களை மிரட்டியது ஆளும் அரசு. ஆனாலும் ஷர்மிளாவோ தன்கோரிக்கையைக் கைவிடவில்லை.

**15 ஆண்டு உண்ணாவிரதம்**

உடல் உபாதைகளால் அவரது ஒவ்வொரு உறுப்பும் வலுவிழந்தது. அப்போது அவரது மூக்கின் வழியே திரவ உணவு மட்டும் செலுத்தப்பட்டது. 14 ஆண்டுகளாகத் தொடர்ந்த இந்த உண்ணாவிரதத்தை பார்த்த மணிப்பூர் மக்கள், அரசியலுக்கு வாருங்கள். உங்களுக்கு ஓட்டுப் போடுகிறோம் என்று அழைத்தனர். ‘ நான் மணிப்பூர் மக்களுக்காகப் போராடும் போராளி, அரசியல்வாதி அல்ல’ என்று கூறி மறுத்தார்.

**ஷர்மிளாவின் உண்ணா விரதம்**

15 ஆம் ஆண்டில் அரசின் தலையீட்டால் நிறுத்தப்பட்டாலும், ‘என் உயிர் போனாலும் பரவாயில்லை. என்றாவது ஒரு நாள் என்பகுதி மக்களின் நிலை மாறும்’ என்கிற விடாமுயற்சியில் ஷர்மிளாவின் உண்ணாவிரதம் தொடர்ந்தது. ஷர்மிளாவின் விடா முயற்சி உலகின் கண்கள் மணிப்பூர் மக்களுக்காக விழிப்படைந்தது என்பது உண்மையே.

**மட்டு நகரில் அன்னை பூபதி**

பாரத விடுதலையில் பெண்களின் உண்ணாவிரத போராட்டங்கள், எத்தகைய வீரியம் மிக்கதாக இருந்ததோ, அதற்கு ஒப்பாக ஈழத்தில் அன்னை பூபதியின் சாகும்வரை போராட்டம் எழுந்தது.

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும், என்று கோரி மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் சார்பில் திருமதி பூபதி கணபதிப்பிள்ளை அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பத்தொன்பதாம் திகதி சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு மட்டக்களப்பு அமிர்தகழி சிறி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றலில் உள்ள குருந்த மரநிழலின் கீழ் அன்னை பூபதி தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

ஈழத்தமிழர் மிக நெருக்கடியான வேளையைச் சந்தித்த காலம் அது. இந்த இராணுவ ஆக்கிரமிப்பு பாரிய ளவில் கூறுமளவுக்கு அன்றைய கால கட்டம் பல நெருக்கடிகளை நேர் கொண்டது. உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்தியப் படையினர் ஒரு புறம், சிறிலங்காவின் இராணுவம் மறு புறம் இவையிரண்டிற்கும் துணையாக நிற்கின்ற தமிழ் ஒட்டுக்குழுக்கள் ஒரு புறம் என்று ஈழத் தமிழினம் இன்னல்களை எதிர்கொண்ட வேளை அது.

ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றில் இருண்ட அத்தியாயத்தின் காலம் அது. இத்தனை அபாயங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் ஒரு சாதாரணப் பெண்மணி, குடும்பத் தலைவி, எவற்றிற்கும் அஞ்சாமல் தனது போராட்டத்தை அகிம்சை வழியில் ஆரம்பித்தார் அன்னை பூபதி.

**தியாக உணர்வும் நெஞ்சுரமும்**

தியாக மனப்பான்மையும், நேரிய நெஞ்சுரமும், அவருக்கு இருந்துள்ள துடன், இறப்பை அடுத்தும், தமது நோக்கை அடைய அன்னையர் முன்னணி தளராது, என்று அன்னை பூபதி அவர்கள் தியாக உணர்வோடு, நெஞ்சுரத்தோடு முழங்கினார்.

1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10:45 மணிக்குத் தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த அன்னை பூபதி அவர்களின் இறுதி மூச்சு, ஈழக் காற்றோடு ஏப்பிரல் மாதம் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8:45 மணியளவில் கலந்து பரவியது.



### பிரதமர் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம்:

# ஆம் ஆத்மியின் அறிவிப்பால் டில்லியில் பலத்த பாதுகாப்பு

டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் கைதைக் கண்டித்து டில்லியில் பிரதமரின் வீட்டை முற்றுகையிடும் போராட்டத்தை ஆம் ஆத்மி கட்சியினர் அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில், பிரதமர் வீடு அமைந்துள்ள பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மதுபான கொள்கையில் முறைகேடு நடந்த விவகாரம் தொடர்பான விசாரணைக்கு ஆஜராகும்படி டில்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவாலுக்குக் கடந்த நவம்பர் முதல் 8 முறை அமலாக்கத் துறை அழைப்பாணை அனுப்பியது.

இதனை நிராகரித்து வந்த கேஜ்ரிவாலை மார்ச் 21 ஆம் திகதி அமலாக்கத் துறை கைது செய்தது. இதனைக் கண்டித்து ஆம் ஆத்மி கட்சியினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேஜ்ரிவால் கைதை கண்டித்து ஆம் ஆத்மி, காங்கிரஸ் உள்ளிட்ட இண்டியா கூட்டணிக் கட்சிகள் மகா பேரணி என்ற பெயரில் கண்டன ஆர்ப்பாட்ட பேரணியை டில்லி ராம் லீலா மைதானத்தில் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி நடத்தவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இன்று பிரதமர் மோடி இல்லத்தை முற்றுகையிடப் போகின்றோம் என அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பில், டில்லி பொலிஸ் ஆணையர் அளித்த ஊடகப் பேட்டியில்,

"பிரதமர் இல்லத்தை முற்றுகையிடும் போராட்டத்துக்கு பொலிஸ் அனுமதியளிக்கவில்லை. ஆம் ஆத்மி கட்சி பேரணியோ, முற்றுகைப் போராட்டமோ நடத்த நாங்கள் அனுமதி கொடுக்கவில்லை. பிரதமர் இல்லம் அமைந்துள்ள பகுதியிலும் மற்ற பகுதிகளிலும் போதுமான அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன." – என்றார்.

# அனைத்து பெண்களும் கண்ணியத்திற்குரியவர்கள் காங்கிரஸின் சுப்ரியா கருத்துக்கு கங்கனா பதிலடி



சமூக வலைதளத்தில் தன்னை மோசமாக விமர்சித்து பதிவிட்ட காங்கிரஸ் கட்சியின் சுப்ரியாவுக்கு, நடிகையும் பா.ஜ.க. மண்டி மக்களவைத் தொகுதியின் வேட்பாளருமான கங்கனா ரணாவத் பதிலடி கொடுத்துள்ளார்.

இதுதொடர்பில் கங்கனா ரணாவத் குறிப்பிடுகையில்,

"அன்புள்ள சுப்ரியா அவர்களுக்கு. கடந்த 20 ஆண்டு காலமாக ஒரு நடிகையாக பல்வேறு பாத்திரங்களில் நான் நடித்துள்ளேன். அப்பாவி பெண்ணாக, கடவுளாக, பேயாக, தலைவியாக என அந்த பாத்திரங்கள் அமைந்துள்ளன. நம் மகள்கள் குறித்த தவறான கருத்துகளில் இருந்து நாம் அவர்களை விடுவிக்க வேண்டும். அவர்களின் உடல் உறுப்புகளை குறித்த ஆர்வத்தை கடந்து நாம் வளர வேண்டும்.

அனைத்துக்கும் மேலாக பாலியல் தொழிலாளர்களை அவதூறாக பயன்படுத்துவதை நாம் தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் அவரது கண்ணியத்திற்கு தகுதியானவர்."– என்றார்.

'மண்டியில் இப்போதைய ரேட் என்ன என்று யாராவது சொல்ல முடியுமா?' என காங்கிரஸ் கட்சியின் சுப்ரியா பதிவிட்டிருந்தார். அதனுடன் கங்கனாவின் புகைப்படமும் பகிரப்பட்டு இருந்தது. இதனை இன்ஸ்டாகிராம் தளத்தில் அவர் தெரிவித்திருந்தார். இந்த சூழலில் அதற்கு தற்போது விளக்கம் கொடுத்துள்ளார்.



# தூத்துக்குடியில் கனிமொழிக்காக வாக்குச் சேகரித்தார் ஸ்டாலின்

மக்களவைத் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ள நிலையில், தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தூத்துக்குடி வேட்பாளர் கனிமொழி கருணாநிதியை ஆதரித்து தூத்துக்குடி காமராஜர் சந்தை பகுதிகளில் வியாபாரிகளிடமும், பொதுமக்களிடமும் இன்று காலை வாக்கு சேகரித்தார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

தமிழகத்தின் 39 தொகுதிகள் மற்றும் புதுச்சேரி தொகுதிக்கு ஒரேகட்டமாக ஏப்ரல் 19 ஆம் திகதி மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

தமிழகத்தில் பா.ஜ.க., தி.மு.க, அ.தி.மு.க தலைமையில் பல்வேறு கட்சிகள் இணைந்து தேர்தலை சந்திக்கின்றன. வேட்புமனு தாக்கல் மார்ச் 20 ஆம் திகதி தொடங்கிய நிலையில், மனுத் தாக்கல் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

தி.மு.கவை பொறுத்தவரை, 21 தொகுதிகளில் நேரடியாக களம் காண்கிறது. இதுதவிர, நாமக்கல்லில் உதயசூரியன் சின்னத்தில் கொமதேக போட்டியிடுகிறது. மற்ற கட்சிகள் தங்கள் சின்னத்திலேயே போட்டியிடுகின்றன.

## இணைந்து பணியாற்ற வாருங்கள்: ஹேமமாலினி எம்.பி. அழைப்பு



உத்தர பிரதேசம் மதுரா தொகுதியிலிருந்து பா.ஜ.க. சார்பில் போட்டியிடும் வாய்ப்பு நடிகை ஹேமமாலினிக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

பிருந்தாவனத்தில் நேற்று தொண்டர்களுடன் ஹேமமாலினி உற்சாகமாக ஹோலி கொண்டாடினார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு 370 இற்கும் மேற்பட்ட இடங்கள் கிடைக்கும். ஒட்டுமொத்தமாக பா.ஜ.க கூட்டணி 400 தொகுதிகளுக்கு மேல் வெல்லும். பிரதமர் மோடி தலைமையின் கீழ் தொலைநோக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று உலக நாடுகள் இந்தியாவை வியந்துபாராட்டி வருகின்றன. இதனை உணர்ந்து நாட்டை வல்லரசாக்கும் எங்களது முயற்சியில் எதிர்க்கட்சிகளும் இணைந்து செயல்பட வேண்டும். அதுவே எனது விருப்பம்.

நல்ல பணிகளையும், முயற்சிகளையும் எதிர்க்கட்சிகள் ஒப்புக்கொண்டு அதற்கு ஆதரவளிக்க வேண்டும்."- என்றார்.



## நடிகை நேகா சர்மாவை தேர்தலில் களமிறக்குவதற்கு காங்கிரஸ் திட்டம்

பிஹார் மக்களவைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய ஜனதா தளம்- பா.ஜ.க. கூட்டணி ஓரணியாகவும் ராஷ்டிரிய ஜனதா தளம், காங்கிரஸ், கொம்யூனிஸ்ட் கட்சிகள் எதிரணியாகவும் போட்டியிடுகின்றன.

ராஷ்டிரிய ஜனதா தளம், காங்கிரஸ் கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டில் இழுபறி நீடிக்கிறது. மொத்தமுள்ள 40 மக்களவைத் தொகுதிகளில், 12 தொகுதிகளை காங்கிரஸ் கோருகிறது. ஆனால் 6 தொகுதிகளை மட்டுமே ஒதுக்க முடியும் என்று ராஷ்டிரிய ஜனதா தளம் கூறி வருகிறது. இரு கட்சிகளிடையே விரைவில் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில் பிஹார் காங்கிரஸ் மூத்த தலைவரும் எம்.எல்.ஏவுமான அஜித் சர்மா பாட்னாவில் கருத்து தெரிவிக்கையில்,

"எனது மகள் நேகா சர்மா பொலிவுட்டின் முன்னணி நடிகையாக இருக்கிறார். எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் பிஹாரின் பாகல்பூர் மக்களவைத் தொகுதி காங்கிரஸ்/க்கு ஒதுக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த தொகுதியில் நேகா சர்மாவை களமிறக்க காங்கிரஸ் மாநில தலைமை விரும்புகிறது." - என்றார்.



# அருணாசல பிரதேசம் சீனாவுக்கு சொந்தமானது

## மீண்டும் இந்தியாவை சீண்டும் சீனா




'அருணாசல பிரதேசம் என்றழைக்கப்படும் 'ஷாங்னான்' சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி' என்று அந்த நாட்டு வெளியுறவு அமைச்சு மீண்டும் கூறியுள்ளது.

'அருணாசல பிரதேசத்தை சீனா தொடர்ந்து உரிமை கொண்டாடி வருவது அபத்தமானது' என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில், இந்தக் கருத்தை சீனா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் தெரிவிக்கையில்,

"இந்தியா, சீனா இடையேயான எல்லைப் பகுதி இதுவரை வரையறுக்கப்படவில்லை. அருணாசல பிரதேசத்துக்கு 'ஷாங்னான்' என்பதுதான் சீனாவின் அதிகாரபூர்வ பெயர்.

இந்தப் பகுதி இந்தியாவால் சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்படுவதற்கு முன்புவரை, சீனாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது.

எனவே, இந்தப் பிராந்தியத்தை திறம்பட நிர்வகிக்கும் உரிமை சீனாவுக்கு எப்போதும் உள்ளது. சட்டவிரோதமாக ஆக்கிரமித்த இந்தப் பிராந்தியத்தை அருணாசல பிரதேசமாக கடந்த 1987-இல் தான் இந்தியா நிறுவியது என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு எதிராக சீனா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது. சீனாவின் இந்த நிலைப்பாட்டில் எப்போதும் மாற்றமிருக்காது." - என்றார்.

# பிரித்தானியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் மாணவி பலி

பிரித்தானியாவில் உள்ள லண்டன் பொருளாதார கல்வி மையத்தில் படித்து வந்த இந்திய மாணவி ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை நிதி ஆயோக்கின் முன்னாள் தலைமை செயல் அதிகாரியான அமிதாப் காந்த் இணையத்தில் பகிர்ந்திருக்கிறார்.

இந்தச் சம்பவத்தில் இந்தியா அரியானாவின் குருகிராம் நகரை சேர்ந்த 33 வயதான சேஸ்த கோச்சார் என்பவரே உயிரிழந்துள்ளார்.



மேற்படி மாணவி லண்டனில் பி.எச்.டி. படிப்பை படித்து வந்துள்ளார்.

இந்த நிலையில், அவர் சைக்கிளில் கடந்த வாரம் தன்னுடைய வீட்டுக்கு திரும்பிக் கொண்டு இருந்த நிலையில் அவர் மீது லொறி ஒன்று மோதியுள்ளது.

சம்பவத்தின் போது, அவருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த கணவர் விபத்துக்குள்ளான மனைவியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார்.

இருப்பினும் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.



# பிரேசிலைத் தாக்கிய பாரிய புயல்!

தென் அமெரிக்க நாடான பிரேசிலின் மிமோசா டோவுல் பகுதியில் ஏற்பட்டுள்ள புயல் மழை காரணமாக தற்போது வரை 20 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த புயலில் சிக்கிய தந்தை ஒருவர் தனது மகளான சிறுமியை காப்பாற்றிய நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

புயல், மழை காரணமாக பொது மக்கள் வீடுகளை இழந்து நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ மற்றும் எஸ்பிரிட்டோ மாநிலங்களை புயல் தாக்கியதையடுத்து சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது.

இதனால், மலைப்பகுதிகள் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டதுடன் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவும் ஏற்பட்டுள்ளது.

மண்சரிவில் பல வீடுகள் இடிந்து விழுந்த நிலையில் மோப்ப நாய்களின் உதவியுடன் இடிபாடுகளுக்குள் சிக்கி இருப்பவர்களை தேடி கண்டுபிடிக்கும் பணி நடந்து வருவதாக மீட்பு படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், இடிபாடுகளில் இருந்து 16 மணித்தியாலத்திற்கு பின்னர் சிறுமி ஒருவர் பத்திரமாக மீட்டுள்ளார்.

ஆனால், அந்த சிறுமியின் தந்தை மகளை காப்பாற்றி விட்டு அவர் அருகிலேயே உயிர் இழந்துள்ளார் என மீட்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த புயலில் மிமோசா டோவுல் பகுதியில் பலர் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்து, மீட்பு பணி நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.





# ரபா நகரில் தாக்குதல் நடத்தும் திட்டத்தை கைவிட வேண்டும்

## இஸ்ரேலிடம் கமலா ஹாரிஸ் கோரிக்கை!

ரபா நகரில் தாக்குதல் நடத்தும் திட்டத்தை கைவிட வேண்டும் என இஸ்ரேல் பிரதமருக்கு அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

காசாமீது இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதல் குறித்து சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இதன்போது ரபா நகருக்குள் தாக்குதலை தொடங்கினால், இஸ்ரேலுக்கு கடுமையான விளைவுகள் ஏற்படும் எனவும் ரபா நகரில் எந்த ஒரு பெரிய ராணுவ நடவடிக்கை மேற்கொண்டாலும் அது மிகப்பெரிய தவறு என்றும் கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ரபாவில் உள்ள சுமார் ஒன்றரை மில்லியன் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் தாம் கண்ணும் கருத்துமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் - 4

செவ்வாய்க்கிழமை 26/03/2024

## ஹெய்ட்டியில் இருந்து கனடியர்களை வெளியேற்றும் நடவடிக்கை மும்முரம்

ஒன்ராரியோ, மார்ச் 26

ஹெய்ட்டியில் இருந்து கனடியர்களை வெளியேற்றி வருவதாக வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்துள்ளார். மார்ச் 25ஆம் திகதி

C2▶



### சுற்றுலாத்துறை தொழில்சார்ந்த வெளிநாட்டவருக்கு

# அல்பேர்ட்டா மாகாணத்தில் வதிவுரிமைக்கு முன்னுரிமை

**கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்தில் வெளிநாட்டவர்களுக்கான தொழில் வாய்ப்பு மற்றும் நிரந்தர வதிவுரிமை பெறுவது குறித்த ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**உலகில் மிகப்பெரிய நாடுகளில் கனடாவும் ஒன்றும். இங்கு நிலப்பரப்புக்கு ஏற்ப மக்கள் தொகை இல்லை என்பதுடன், பலநாடுகளில் இருந்து குடிபெயர்ந்தவர்களால் இங்கு தொழில் துறை வலுப்படுத்தப்பட்டுள்ளது.**

குறிப்பாக கனடாவுக்கு சென்றால் அகதி அந்தஸ்து கிடைப்பது உறுதியென அங்குள்ள புலம்பெயர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், பல்வேறு சட்டவிரோதமான வழிகளை பின்பற்றியாவது கனடாவுக்குச் செல்ல வேண்டுமென்பதில் உலகளாவிய ரீதியில் பலரும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

C2▶

# கனடியத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடா? மத்திய அரசின் குழுவின் விசாரணை நாளை முதல்

ஒன்ராரியோ, மார்ச் 26

மத்திய அரசாங்கத்தின் விசாரணைக்குழுவொன்று கனடியத் தேர்தல்களில் வெளிநாட்டு தலையீடு தொடர்பில் புலம்பெயர் சமூகங்களின் கருத்துக்களைப் பெறவுள்ளது.

மார்ச் 27ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த விசாரணையின் போது, கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களில் சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் ஏனைய நாடுகளின் சாத்தியமான வெளிநாட்டுத் தலையீடு தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

சமுதாயத் தலைவர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் மத்திய தேர்தல் அதிகாரிகள் உள்ளடங்கலாக நாற்பதிற்கும் மேற்பட்டோரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கியூபெக்கைச் சேர்ந்த நீதிபதி மேரி-ஜோசே ஹோக் தலைமையிலான விசாரணைக் குழு இந்த விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது.

C2▶



# கார்பன் வரி அதிகரிப்பை எதிர்த்து ஒன்ராரியோ மாநில அரசு போராடும்

## இணைப் போக்குவரத்து அமைச்சர் விஜய் தணிகாசலம் உறுதி



ஒன்ராரியோ,மார்ச்26

மத்திய அரசாங்கம் கொண்டு வரவுள்ள கார்பன் வரி அதிகரிப்பை எதிர்த்து ஒன்ராரியோ மாநில அரசாங்கம் தொடர்ந்து போராடும் என மாநில இணைப் போக்குவரத்து அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசாங்கத்தினால் ஏப்ரல் முதலாம் திகதி முன்வைக்கப்படவுள்ள வரவு – செலவுத் திட்டத்தில் கார்பன் வரி 23 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

இது குறித்து மாநிலங்களவையில் உரையாற்றிய விஜய் தணிகாசலம், இந்தக் கார்பன் வரியானது கனடிய மக்கள் மீதான பெரும் சுமை எனத் தெரிவித்துள்ளார்.

வேலைக்குச் செல்லுதல், மளிகைப் பொருள்களை வாங்குதல் என நாளாந்த செலவீனங்களில் இது தாக்கத்தை ஏற்படுத்துவதாக சுட்டிக்காட்டிய அவர், தொழில் துறையை பாதித்து, தொழில்களை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லும் இவ்வாறான சட்டம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பதிலாக, பின்னோக்கி கொண்டு செல்வதாகத் தெரிவித்துள்ளார்.



### ஹெய்ட்டியில் இருந்து...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

18 கனடியர்கள் வான்வழியாக ஹெய்ட்டியிலிருந்து, டொமினிக் குடியரசுக்கு அழைத்து வரப்பட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து வரும் நாள்களில் மேலும் பல கனடியர்களை அகற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜொலி கூறியுள்ளார்.

2021ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து பெரும் பாதுகாப்பு நெருக்கடியில் ஹெய்ட்டி உள்ளது.

இந்த மாத தொடக்கத்தில் ஹெய்ட்டியின் தேர்ந்தெடுக்கப்படாத பிரதமர் ஏரியல் ஹென்றி, கிழக்கு ஆபிரிக்க நாட்டிலிருந்து பொலிஸார் தலைமையில் சர்வதேச இராணுவத் தலையீட்டிற்கான திட்டங்களை உறுதிப்படுத்த கென்யாவிற்கு விஜயம் செய்தபோது குழப்பம் அதிகரித்தது.

இதனைத் தொடர்ந்து வெளிநாட்டு தூதரகங்கள் மூடப்பட்டமையுடன், ஊழியர்களும், நாட்டவர்களும் மீள அழைக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த இரண்டு வருடங்களாக கனடியர்களுக்கு ஹெய்ட்டிக்கான போக்குவரத்து எச்சரிக்கை அறிவித்தலை கனடா வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### அல்பேர்ட்டா மாகாணத்தில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில், கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்தில் வெளிநாட்டவர்களுக்கான தொழில் வாய்ப்பு மற்றும் நிரந்தர வதிவுரிமை பெறுவது குறித்த ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாகாணத்தில் விருந்தோம்பல் தொழிற்துறையில் வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன. எதிர்வரும் 2035ம் ஆண்டளவில் மாகாணத்தின் சுற்றுலா கைத்தொழிற்துறையை இரண்டு மடங்காக அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

அல்பேர்ட்டா மாகாணம் இதற்கென பிரத்தியேகமான ஓர் குடிவரவு திட்டமொன்றை அறிமுகம் செய்ய உள்ளது.

விருந்தோம்பல் தொழிற்துறைசார் தகுதியுடைய வெளிநாட்டவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் இந்த புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

கனடாவில் ஏற்கனவே தற்காலிக அடிப்படையில் சுற்றுலாத்துறை தொழில்களில் ஈடுபட்டு வரும் வெளிநாட்டுப் பிரஜைகள், நிரந்தர வதிவுரிமை பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ளது.

### கனடியத் தேர்தல்களில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மார்ச் 27ஆம் திகதி முதல் ஏப்ரல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த விசாரணைகளில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அமைச்சரவை உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பல சிரேஷ்ட அரசியல் தலைவர்களும் முன்னிலையாகவுள்ளனர்.

இந்த ஆணைக்குழுவின் பூர்வாங்க அறிக்கையானது மே மாதம் 3ஆம் திகதி வெளியாகவுள்ளது.




# இரு பூர்வீகக் குடிப் பெண்களின் உடலங்களை தேட 20 மில்லியன் டொலர்கள் அரசு ஒதுக்கீடு

**மனிடோபா, மார்ச் 26**

இரண்டு பூர்வீகக் குடிப் பெண்களின் மனித உடலங்களைவ்பிறயார் கிறீன் நிலப்பரப்பில் தேடுவதற்காக 20 மில்லியன் டொலர்களை மத்திய அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்தத் தேசிய நெருக்கடியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், சமுதாயங்களுக்கும் நீதியை நாடுவதற்கும், குணப்படுத்தலுக்குமான அரசாங்கத்தின் உறுதிப்பாடாக இந்த நிதியுதவி இருப்பதாக பூர்வீகக் குடிகள் நலன்பேண் அமைச்சர் கெரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.


தனது சமூக ஊடகத்தளத்தில் இது குறித்து பதிவை வெளியிட்டுள்ள கெரி ஆனந்தசங்கரி, ஆரம்ப கற்கைக்காக ஒதுக்கப்பட்ட 500,000 டொலர்கள், மேலதிக திட்டமிடலுக்காக ஒதுக்கப்பட்ட 740,000 மற்றும் நெருக்கடி காலத்தின் போது தேவையான மனநல உதவிக்கான 200,000 டொலர்கள் நிதிக்கு மேலதிகமாக இந்த 20 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இரண்டு பூர்வீகக் குடிப் பெண்களினதும் உடலங்கள் கண்டெடுக்கப்படும் வரையும் – பெண்கள், சிறுமியர் எனக் காணாமல் போதல்கள் நிறுத்தப்படும் வரையும் – ஓய்வு எடுக்கக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநில அரசாங்கமும் 20 மில்லியன் டொலர்களை இதன்பொருட்டு வழங்குவதாக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாற்றுத்திறனாளிகள் நலனுக்கான நிதி ஒதுக்கீட்டை மாற்றவேண்டாம்

## நிதி அமைச்சரிடம் வலியுறுத்தல்



ஒன்ராரியோ,மார்ச்26

எதிர்வரும் வரவு – செலவுத் திட்டத்தில் கனடாவின் மாற்றுத்திறன் நலன்களுக்கான நிதியை மாற்ற வேண்டாம் என லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நிதியமைச்சரிடம் கோரியுள்ளனர்.

மாற்றுத்திறனுடையவர்கள் வறுமையில் வாடுவதனைத் தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட இந்த திட்டமானது சிறந்த சமூகக் கொள்கை என லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பம் டேமொப், நிதியமைச்சர் கிறிஸ்டியா பிரிலேன்ட்டுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கும் இந்த கடிதத்தை டேமொப் அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த கோடை காலத்தில் கனடாவின் மாற்றுத்திறனாளிகள் நலன் சட்டமூலம் சட்டமாக அங்கீகரிக்கப்பட்டது.



# புனித மாதத்தில் யுத்த நிறுத்த அழைப்பு; ஜெனிவாவின் கோரிக்கைக்கு வரவேற்பு

ஒன்ராரியோ, மார்ச் 26

இஸ்லாமியர்களின் புனித மாதத்தின் போது இஸ்ரேல் மற்றும் ஹமாஸ்க்கு இடையில் போர்நிறுத்தத்திற்கு ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அழைப்பு விடுத்துள்ளமையை கனடா வரவேற்றுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் முதல் நிலையான போர்நிறுத்தத்திற்கு கனடா வலியுறுத்தி வருவதாக வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அழைப்பை வரவேற்றுள்ள அமைச்சர் ஜொலி, வன்முறை நிறுத்தப்பட்டு, பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் கனடிய அரசாங்கம் உறுதியுடன் இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹமாஸ் அமைப்பானது ஆயுதங்களை கைவிட்டு, மனிதநேய உதவிகள் காஸாவை அடைவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மோதலுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அழைப்பு சரியான செய்தியை கொண்டு சேர்த்திருக்கும் என தாம் நம்புகிறார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# தொலைத்தொடர்பு சேவை நிறுவன அதிகாரியை விளக்கத்துக்கு அழைக்கின்றது நாடாளுமன்றம்!

ஒன்ராரியோ, மார்ச் 26

வேலை நீக்கம் தொடர்பில் கனடாவின் பிரதான தொலைத்தொடர்பு சேவை வழங்குநரை நாடாளுமன்றத்திற்கு அழைத்துள்ளனர்.

நாடு முழுவதும் ஆயிரக்கணக்கானோரை பணி நீக்கம் செய்யும் நிறுவனத்தின் தீர்மானம் தொடர்பில் விளக்கமளிக்குமாறு கோரியே, பெல் கனடா, தொலைத்தொடர்பு சேவை வழங்குனர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மிர்கோ பிபிக்கினை நாடாளுமன்றத்திற்கு அழைத்துள்ளனர்.

பெப்ரவரி 29ஆம் திகதியும், மார்ச் 19ஆம் திகதியும் இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் தவிர்க்க முடியாதக காரணங்களினால் அவர்களால் சமுகமளிக்க முடியவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏவ்வாறாயினும், கடந்த வாரம் இடம்பெற்ற முக்கிய கூட்டமொன்றின் போது பெல் கனடா பிரதிநிதிகளை மீண்டும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.